**OPEN ACCESS**

Manuscript ID: TAM-08012023-6630

Volume: 8

Issue: 1

Month: July

Year: 2023

P-ISSN: 2454-3993

E-ISSN: 2582-2810

Received: 21.04.2023

Accepted: 16.06.2023

Published: 01.07.2023

Citation:
Ponnuthurai, Samitham, and Vigneswary Pavanesan. "Explication of the Truth of PATHI in Saiva Siddhanta." *Shanlax International Journal of Tamil Research*, vol. 8, no. 1, 2023, pp. 61–70.

DOI:
https://doi.org/10.34293/tamil.v8i1.6630

*Corresponding Author:
pvigneswary@univ.jfn.ac.lk

This work is licensed under a Creative Commons Attribution-ShareAlike 4.0 International License

# Explication of the Truth of PATHI in Saiva Siddhanta

**Samitham Ponnuthurai**
*Research Student, M.Phil. (Hindu Civilization)*
*University of Jaffna, Sri Lanka*
*https://orcid.org/0009-0005-0859-6851*

**Vigneswary Pavanesan**
*Supervisor, M.Phil., Research Programme (Hindu Civilization)*
*University of Jaffna, Sri Lanka*

Among the triple entities of PATHI (GOD), PASU (SOUL(S) and PAASAM (RESTRAIN(S) of SAIVA SIDDHANTA, this research paper deals with PATHI. All of these triple entities are eternal. PATHI, the God of Saiva Siddhanta is SIVAM. SIVAN is the same. That which is related to SIVAM is SAIVAM, says Thirumanthiram. The Ultimate God of SAIVAM is SIVAN. He is the SUPREME. SAIVA SIDDHANTA explains the way to reach him.

PASU, the soul(s) released from its PAASAM, the restrain(s) and merges with PATHI, the Supreme is MUKTHI, the state of fullest potency - liberation. This is the Supreme Bliss SAAYUCHCIYAM of ULTIMATE LIBERATION – PARA MUKTHI, says Thirumanthiram. This is the state of those reached the feet of the Lord by realizing His Real State Itself – THAT-SIVAM. This state of non-dual union of the two is comparable to the conjunction of the two Tamil words THAAL(The feet of the Lord) + THALAI (Head of the devotee) becoming one word THAADALAI.

The SUPREME LOVE (KARUNAI) of the God PATHI is the one that helps the souls to attain this state of their fullest potency - liberation. PATHI, the God provides the souls with THANU – the body, KARANA – the instruments, PUVANA – the place – universe and BHOGA – the objects of experience, to experience as per their individual twin karma to consume the fruits of it. All these are products of MAYA as such they are called MAYEYAM. Going through this, the sprit soul gains PAASA JNANA – the worldly intelligence, PASU JNANA – the spiritual intelligence and then reaches the states of equanimity of karma – IRU-VINAI-OPPU and ripening of the Restrains ready to be removed – MALA-PARI-PAAGA for the Descent of the Salvic Potency of the God – SAKTHI-NIPAADHA ultimately to attain the SUPREME INTELLIGENCE of SIVA – PATHI JNANA. PATHI, the God inseparable with His unblemished, unconditional, unlimited supreme Love – SAKTHI, bestows the souls with His state of Supreme Intelligence – PATHI JNANA.

PATHI, the God both through his REAL FORM/NATURE – SWA-RUPA/ SOROOPA LAKSHANA and OFFICIAL FORM/NATURE – THADATHTHA LAKSHANA graces the souls. God in his real form - SWA-RUPA/SOROOPA STATE is all pervasive, neither of any form nor formless and no descriptions. This STATE OF SUPREME SELF IN ITSELF is called SUDDHA SIVAM – THE PURE STATE. The same God in his official form – THADATHTHA state, assumes nine different forms for three different actions – LAYA – bestowing immersion in him, BHOGA - bestowing worldly enjoyments and ADIGAARA – bestowing status of power for the souls. The same takes the form of our ultimate GURU to grace.

As per the concept of SAT-KARYA-VAADHA, there is no effect without a cause, as such PATHI, the God is the Intelligence behind the creation, sustenance and dissolution of the universe as the Efficient cause – NIMITHTHA-KAARANAM. He is the cause of all these (again and again) after recurrent cycles of complete destruction, as such He, the God of Dissolution is praised as the HEAD of ALL.

The Supreme PATHI described in Saiva Siddhanta stands out as Omniscient cause of the all causes and actions bestows the souls with His GRACE – THIRU-ARUL. It redeem the souls by making them one with Him. It Transforms the SEEVAN, the soul by bestowing SIVAHOOD – SIAVATHTHUVAM – the godly state of INFINITE BLISS – SIVA-ANANDAM under Him. This is the Ultimate State of Non-dual Realization – ADVAITA-MUKTHI.

The Real role of God in Saiva Siddhanta is to provide the souls with respective bodies, instruments, objects of enjoyment and place in multiple births until they mature enough through experience - MALAPARI-PAAGA, to bestow SIVAHOOD – the godly state ultimately. This is the True Nature of God -PATHI in Saiva Siddhanta.

**Vocabulary**

- THAT-PARAM – True State Itself
- MAAYEYAM – Products of Maaya
- SANGAARA-KAARANAN – Lord of Ultimate Dissolution/ Destrction
- SAT-KAARYA-VAADAM- A Cincept of Nothing comes from Nothing for Nothing by Nothing (Ex Nihilo; Nihil Fit (in Greek)
- SAHASTA-THALAM – Thousand Petal Base
- THAATHAANMIYAM – Non-Dual Existence
- THAADALAI – (Explaind In The Text)
- SARVAGJNAN – Omniscient
- SARVA-KARTHIRUTHVAM – Cause of the All Causes
- AGANDITHAM – All Pervasive
- NINITHTHA KAARANAN – Efficient Cause/ Intelligent Cause
- ADVAITA – Non-Dual Union
- PAASA JNANAM – Worldly Intelligence
- PASU JNANAM – Spiritual Intelligence
- PATHI JNANA – Supreme Intelligence

# சைவசித்தாந்தத்தில் பதி உண்மையை விளக்குதல்

***திரு. சாமிதம் பொன்னுத்துரை***
ஆராய்ச்சி மாணவர் - எம்.பில் (இந்து நாகரிகம்),
FGS/MPhil/RPS/HP/2020/01

***முனைவர் விக்னேஸ்வரன் பவாணேசன்***
மேற்பார்வையாளர், எம்.பில். ஆராய்ச்சித் திட்டம் (இந்து நாகரிகம்)
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

***அறிமுகம்***

*சைவசித்தாந்தம் இறை, உயிர், தளை (பதி, பசு, பாசம்) என்ற முப்பொருள்களும் உண்மையானவை அநாதியானவை எனக் கூறுகின்றது. இதைத் திருமந்திரம்,*

***"பதி பசு பாசம் எனப் பகர் மூன்றில்***
***பதியினைப்போல் பசு பாசம் அநாதி***
***பதியினைச் சென்றணுகாப் பசு பாசம்***
***பதியணுகில் பசு பாசம் நிலாவே."*** ***(திருமந்திரம் 113)***

*எனத் தெளிவாகத் தெரிவிக்கின்றது. பதியின் மேன்மையையும், பெருங்கருணையையும் சிறப்பிக்கின்றது. இறையருள் கிட்டும்போது பசுவைப் பந்தித்த பாசங்கள் வலிகெட்டு ஓடிவிடும் எனவும் கூறுகின்றது. பதி என்னும் சிவப் பரம்பொருள் அந்தம், ஆதி இல்லாத அரும் பெருஞ்சோதி நித்தியமான, சத்தியமான ஆனந்த வெள்ளப் பொருள் அது சச்சிதானந்தம். இம் மூன்று உண்மைப் பொருள்களும் மெய்ஞ்ஞானியர் ஆராய்ச்சி செய்யத்தக்க பொருள்களாகக் கண்டுள்ளனர். வேத சிவாகமங்கள் அவற்றை விளக்கிச் சொல்லுகின்றன. தொன்மையானது பதி என்றும், அருமையான உயிர்கள் பல என்றும், பெரிதான விலங்கு போன்று பந்திப்பது தளை என்றும் பின்வரும் கந்தபுராணச் செய்யுள் உறுதிசெய்கின்றது.*

***"சான்றவர் ஆய்ந்திடத் தக்கவாம் பொருள்***
***மூன்றுள மறையெலாம் மொழிய நின்றன***
***ஆன்றதோர் தொல்பதி ஆருயிர்த்தொகை***
***வான்றிகள் தளையென மொழிவர் அன்னவே."*** ***(கந்தபுராணம்)***

*மெய்யுணர்வாளர்கள் ஆராய்ச்சி செய்யத்தக்க பொருள்கள் மூன்று உள்ளன. வேத உபநிடதங்கள் அவற்றை விளக்கிச் சொல்லுகின்றன. அவையாவன, தொன்மையான பதி, அருமையான பல உயிர்கள் பெரிதாக விளங்குகின்ற விலங்கு ஆகிய பாசம் என்பவையாகும் என்பது இச்செய்யுளின் பொருள். சைவசித்தாந்தம் இவற்றை முப்பொருள் உண்மையெனக் கூறுகின்றது.*

**சைவசித்தாந்தம்**

சைவசித்தாந்தம் என்பதில் சைவம், சித்தம், அந்தம் என்று மூன்று ஆழமான சொற்பிரயோகங்கள் செறிந்திருக்கின்றன. சைவம் என்பது சிவனோடு சம்பந்தமாவது சித்தம் என்பது சிந்தனைத் தெளிவு அந்தம் என்பது முடிபு. எனவே "சைவத்தின் முடிந்த முடிபாகிய பதியின் உண்மையை அறுதியிட்டுக் கூறும் இறுதிமுடிவே சைவதித்தாந்தம் ஆகும்."

**"சைவம் சிவனுடன் சம்பந்தமாவது
சைவம்தனை அறிந்தே சிவம் சாருதல்
சைவம் சிவம்தனைச் சாராமல் நீவுதல்
சைவம் சிவானந்தம் சாயுச்சியமே."**

**(திருமந்திரம் 1512)**

என திருமூலர் சைவத்தின் முழு முதற்கடவுள் சிவன் என்பதையும், அவனை அடையும் சிவாநந்தம் என்னும் பேரின்ப நிலையே பரமுத்தியாகிய சாயுச்சியம் என்பதையும் திறம்பட உரைக்கின்றார்.

சைவசித்தாந்தம் என்ற சொல்லாடலைக் கூட திருமந்திரமே தமிழில் முதல்முதலில் பிரயோகித்திருக்கின்றது. சாத்திர நூலாகவும் தோத்திர நூலகவும் போற்றப்படும் திருமந்திரம்,

**"கற்பன கற்றுக் கலைமன்னும் மெய்யோகம்
முற்பத ஞானம் முறைமுறை நண்ணியே
சொற்பதமேவித் துரிசற்று மேலான
தற்பரம் கண்டுள்ளோர் ை
சவசித்தாந்தரே."**

**(திருமந்திரம் 1421)**

எனத் தெளிவாகத் தந்திருக்கின்றது. எனினும் காமிக ஆகமம் முதலாந்ததந்திரத்திலுள்ள தந்திர அவதாரப் படலத்தின் 119ஆவது சுலோகமும் சைவசித்தாந்தம் என்ற பதத்தை வடமொழியில் பயன்படுத்தியிருக்கின்றது. மேலான தற்பரத்தைக் கண்டு, உணர்ந்து சிவாநுபவம் பெற்றவர்களையே சைவசித்தாந்தராகத் திருமூலர் இனம் காட்டுகின்றார். மேன்மை தங்கிய சிவனையே மனம் மொழி மெய்களால் உண்மைப்பொருளாக அறிவின் கண்பார்ப்பவர்களையே சைவசித்தாந்தர் என்று அருமையாக விளக்கம் தந்திருக்கின்றார்.

### பதிக்கோட்பாடு

பிரபஞ்ச அவயவப் பகுப்புக்களான தனு, கரண, புவன போகங்களைச் சிவன் உயிர்களுக்கு அவ்வவற்றின் வினைகளுக்கேற்பக் கொடுத்து வினைப்பயனை நுகரச்செய்கிறான். இதன்மூலம் அவற்றின் மலவாதனையை மடங்கச்செய்து அவ்வுயிர்களைப் பக்குவமடையச் செய்கின்றான். பக்குவம் அடைந்த உயிர்கள் இருவினைகளான நல்வினைகளையும் தீ வினைகளையும் சமநிலையில் வைத்து நோக்கும்போது இரு வினையொப்பு ஏற்படுகின்றது. இதன்மூலம் மலபரிபாகம் உண்டாகின்றது. உண்டாகவே மந்ததரம், மந்தம், தீவிரம், தீவிரதரம் என்ற நால்வகைச் சத்திநிபாதம் ஏற்படுகின்றது. இச்சத்திநிபாதங்கள் என்பது உயிர்கள் மீது பதியின் ஆணையாகிய திருவருள் பதியச் செய்வதாகும். இவற்றில் தீவிரதர சத்திநிபாதம் அடைந்த உயிர்களே பவவினையில் சிக்கித் தவிப்பதாகிய பிறவிப்பெருங்கடலை நீந்திக் கடக்கின்றன. ஆறு ஆதாரங்களுக்கும் மீதானமாகிய சகஸ்ரதளத்தில் சிவப்பிரகாச அனுபவ நிலையான துரியாதீதத்தில் திளைத்திருக்கின்றன. சிவனோடு இரண்டறக்கலக்கும் அத்துவித முத்தியாகிய பேரின்பப் பேற்றைப் பெறுகின்றன. இதுவே உயிர்கள் அடையும் பரமுத்திநிலை பதியோடு தாடலைபோற் கூடியநிலை பதியும் உயிரும் பிரிவற நிற்கும் நிலை சைவசித்தாந்தம் கூறும் உன்னத நிலை இதுவேயாகும். பதியானது உயிர்கள் மீது கொண்ட அளப்பரும் கருணை காரணமாகவே அவற்றிற்கு மாயையின் காரியங்களான மாயேயங்களை-தனு, கரண, புவன, போகங்களை- வினைப்பயன்களுக்கேற்பக் கொடுத்து வினைகளைப் புசித்துக் கெடுக்கச் செய்யும் பேரறிவாளனாவான் பரிபூரணனாவான் என்ற உண்மையை சைவசித்தாந்தக் கோட்பாடு தெட்டத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றது.

### மெய்கண்ட சாத்திரங்களில் பதிஉண்மை

ஆன்மாக்கள் வினைகளை நுகர்ந்து ஒழிப்பதை நெறிப்படுத்தும் முதல்வனையே பதி என்று மெய்கண்ட சாத்திர முதல் நூலாகிய சிவஞானபோதம் அழுத்திக் கூறுகிறுது.

***"அவன் அவள் அது எனும் அவை மூவினைமையின் தோற்றியதிதியே ஒடுங்கி மலத்துளதாம் அந்தம் ஆதி என்மனார் புலவர்"***
***(சிவஞானபோதம்சூத். 1)***

இந்தப் பிரபஞ்சத்தை ஆண் பெண் அது என்று உயிர்வர்க்கமும் சட வர்க்கமுமாக அவை என்ற சொல்லால் உயர்த்தி, தோற்றம் (சிருஷ்டி), நிலைத்தல் (திதி), ஒடுக்கம் (சங்காரம்) என்ற முத்தொழில்களை ஆற்றுவதற்குரிய ஒருவனாகிய முதல்வன் எனப்படும் பதியையே "ஒடுங்கி" என்று மாதவச் சிவஞானமுனிவர் கூறுகின்றார். மாயையில் அவை என்ற இவைகளை ஒடுக்குபவனான பதியை ஒடுக்கி (ஒடுங்கி) எனக் குறிப்பிடுவது நோக்கத்தக்கது. சங்காரகாரணனான பதியே உலகத்தின் (பிரபஞ்சத்தின்) புனரோற் பவத்திற்கு உரிய முதல்வனாவான் என்று இச்சூத்திரம் வலியுறுத்துகின்றது.

பதியின் உயர் நிலையை இவ்வாறு கூறும் கருத்தைச் சிவஞானபோதத்தின் வழிநூலாகவும், உரைநூலாகவும் கொள்ளப்படும் சிவஞான சித்தியாரின் (சுபக்கம்) முதலாம் சூத்திரம் விரித்துத் தந்திருக்கின்றது.

***"ஒருவனோடொருத்தி யென்று உரைத்திடு முலகமெல்லாம் வருமுறை வந்து நின்று போவது மாதலாலே தருபவனொருவன் வேண்டும் தான் முதலீறுமாகி மருவிடு மநாதி முத்த சித்துரு மன்னிநின்றே"***
***(சிவஞானசித்தியார் சூத். 1)***

அவனென்றும் அவளென்றும் அது வென்றும் கூறப்படும் சேதன, அசேதனப் பிரபஞ்சமெல்லாம் தோன்றும் முறையிற் தோன்றி, நின்று, ஒடுங்குகின்றன. அதனைக் காரியப்படுத்துவதற்கு ஒரு கருத்தா வேண்டும். அக்கருத்தா தனக்கொரு முதல்வனின்றி தானே யாவற்றிற்கும் நிமித்தகாரணனும், சங்கார காரணனுமாய் இயல்பாகவே பாசம் நீங்கி, ஞானமாகிய சத்தி வடிவத்தைப் பொருந்தி நின்று காரியப்படுத்தும் என்பது இச்சூத்திரத்தின் பொருள். இதில் உலகத் தோற்றத்திற்கு ஆதியும் அந்தமும் இல்லாத அரும்பெருஞ்சோதி யாகிய பதி "அநாதிமுத்தசித்துரு" என்ற பதியுண்மை வலியுறுத்தப் பட்டிருக்கின்றது.

சிவஞானபோதம் இரண்டாம் சூத்திரம்,

***"அவையே தானே ஆய் இருவினையில் போக்கு வரவு புரிய ஆணையின் நீக்க மின்றி நிற்குமன்றே"***
***(சிவஞானபோதம் சூத். 2)***

என்று பதி, ஒன்றாய், வேறாய் உடனாய்த் திருவருளோடு இணைந்து இறப்பையும் பிறப்பையும் நெறிப்படுத்துகின்றது. அவையேயாய் தானேயாய் அவையே தானேயாய் என்று பதி உடல் உயிர்களோடு ஒன்றாய் சூரியனும் கண்ணொளியும் போல் ஆன்மசிற்சத்திக்கு வேறாய், பொறிபுலன்களோடு உடனாய் நிற்கும் பதியுண்மை விளக்கப்படுகின்றது. பதி உயிர்கள் மீது திருவருளைப் பாய்ச்சி முத்தொழில்கள் செய்வதை,

***"ஆக்கி எவையும் அழித்து ஆசுடன் அடங்கப்போக்கு மவன் போகாப் புகல்"***
***(திருவருட்பயன் -4)***

என்ற திருவருட்பயன் குறள் வெண்பா புலப்படுத்துகின்றது. திருக்களிற்றுப்படியாரும்

***"ஈறாகி அங்கே முதல் ஒன்றாய் ஈங்கிரண்டாய் மாறாத எண்வகையாய் மற்று இவற்றின் - வேறாய் உடனாய் இருக்கும் உருவுடைமை என்றும் கடனாய் இருக்கின்றான் காண்"***

என்று சான்று பகர்கின்றது. இக்கருத்தைச் சம்பந்தப்பெருமான்,

***"ஈறாய் முதல் ஒன்றாய் இரு பெண் ஆண் குணம் மூன்றாய் மாறா மறை நான்காய் வரு புதம் அவையைந்தாய் ஆறார் சுவை***

**ஏழோடிசை எட்டுத்திசை தானாய் வேறாய்
உடன் ஆனாய் திருவீழிம் மிழலையே"**

*(1.11.2)*

என்ற தேவாரத்தில் எடுத்துக்காட்டியிருக்கின்றார்.

திருமந்திரம் பாயிரம் கடவுள் வாழ்த்தில் உள்ள முதலாவது மந்திரத்தில் பதியின் பெருமை சிறப்பாக ஏத்தியிருப்பதைக் கண்டுகொள்ளலாம்.

**"ஒன்றவன்தானே இரண்டவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள் நான்குணர்ந்தான் ஐந்து
வென்றனன் ஆறு விரிந்தனன் ஏழும்பர்ச்
சென்றனன் தான் இருந்தான்
உணர்ந்தெட்டே" (திருமந்திரம் - 1)**

ஒரே பதி, சிவம் சத்தியாக, மும்மூர்த்திகளாக, நால்வேதங்களாக, பஞ்சேந்திரியங்களாக, ஏழாவது நிலையில் சகஸ்ரதளமாக, அட்டமூர்த்தமாக (பஞ்ச திங்கள், சூரியன், சந்திரன், ஆன்மா) விளங்கி அவற்றின் உடனாய், வேறாய், கலந்து பிரபஞ்சத்தை இயக்குகின்ற முதல்வனாக விளங்குகின்றான்.

**பதி நிமித்த காரணன்**

காரணமின்றி எக்காரியமுமில்லை என்பது சைவ சித்தாந்தக் கருத்து. "உள்ளது இல்ல தாகாது இல்லது உள்ளதாகாது" என்ற சற்காரியவாதப்படி உள்ள பொருளான தனு, கரண, புவன, போகங்களையும் உயிர்களையும் சிற்சத்தியின் துணையோடு பதியானவர் மாயையிலிருந்து தோற்றுவித்து, சங்கார வேளையில் அவற்றை அம்மாயையிலே ஒடுக்குகின்றான். இங்கே உள் பொருள்களாகிய மூன்று காரணங்களிலிருந்தே பிரபஞ்சமும் ஆன்மாக்களுமாகிய காரியங்கள் தோற்றம் பெறுகின்றன. அம் மூன்று காரியங்களாவன:

1. முதல் காரணம்- மாயை.
2. துணைக்காரணம்- திருவருட் சத்தியும் வினைகளும்.
3. நிமித்தகாரணம்- பதி. (சிவன்)

இவற்றைச் சைவசித்தாந்தம் உதாரணம் காட்டி விளக்குகின்றது. ஒரு மட் பாண்டம் செய்வதற்கு மூன்று காரணங்கள் தேவைப்படுகின்றன.

1. முதற்காரணம்- மண்
2. துணைக்காரணம்-தண்ட சக்கரங்கள் (திரிகை)
3. நிமித்த காரணம்-குயவன்.

இவ்வுதாரணத்தின் படி குயவன் நிமித்தகாரணனாய் நின்று குடத்தை செய்வது போல, பதியும் நிமித்தகாரணன் என்ற நிலையில் நின்று பிரபஞ்த்தை தோற்றுவிக்கின்றான். அதாவது பதியே உலகின் தோற்றத்திற்கும் ஒடுக்கத்திற்குமுரிய நிமித்தகாரணன் ஆவான் என சைவ சித்தாந்தம் பதியுண்மையை எடுத்துக்காட்டுகிறது. இவ்வுண்மை மூவகை அளவைகளான காண்டல் (பிரத்தியட்சம்), கருதல் (அனுமானம்), உரைஃஆகமம் (ஆப்த வாக்கியம்) என்பவற்றோடு பதிஞான உணர்வையும் நிலைநாட்டுகின்றது.

**தாதான்மிய நிலை**

"போக்குவரவு புரிய ஆணையின் நீக்கமின்றி நின்று" சிவன் உயிர்களை நல்வழிப்படுத்து கின்றான். ஆணையாகிய தனது சத்தியுடன் இறைவன் அத்துவிதமாகப் பிரிவின்றி நின்று உயிர்களுக்கு அருள் புரியும் நிலையே தாதான்மிய நிலையாகும்.

**"தன்நிலைமை மன்னுயிர்கள் சாரத் தரும் சத்தி
பின்னமிலான் எங்கள் பிரான்"**

**(திருவருட்பயன்-2)**

என்ற திருவருட்பயன் சத்திபின்னமிலாத தாதான்மிய நிலையை வெளிப்படுத்தி நிற்கின்றது. மகேஸ்வர மூர்த்தங்கள் இருபத்தைந்தில் ஒன்றான அர்த்தநாரீஸ்வர வடிவமே இத் தாதான்மிய நிலையாகும். இவ்வுண்மை நிலையை சாத்திர தோத்திர நூல்கள் விரிவாகத் தந்திருக்கின்றன.

***"நன்றுடையானை தீயதில்லானை நரை வெள்ளேறு ஒன்றுடையானை உமை யொருபாகம் உடையானை"(1.98.1)***

***"மழைக்கண் மடவாளை ஓர்பாகம் வைத்தீர்" (7.9.9)***

***"மான்நோக்கி உமையாள் பங்கா" (8.5.85)***

***"கோதுகுலாவிய குழல் சடைமாது குலாவிய வாள்நுதல் பாகனை" (திருமந்திரம் 16)***

இவ்வாறு தாதான்மிய நிலை இத்தோத்திர சாத்திர நூல்களில் மேலும் பல இடங்களிலும் பயின்று வந்திருப்பதைக் காணலாம்.

**பதி ஏகனும் அநேகனுமானவன்**

சிவன் ஏகனாகவும், அநேகமானவனாகவும் நின்று உயிர்களின் நலனைப் பேணுகின்றான் என்பதை திருமந்திரம்

***"சேயன் அணியன் பிணியிலன் பேர்நந்தி தூயன் துளக்கற நோக்கவல்லார்க்குமாயின்" (திருமந்திரம் 1540)***

என்று விபரிக்கின்றது.

***"ஏகனுமானவன் அநேகனுமானவன் நாதனு மானவன் என்று உந்தீபற" (திருவுந்தியார் 5)***

என்ற திருவுந்தியார் அடிகளும்,

***"ஏகன் அநேகன் இறைவனடி வாழ்க" (சிவபுராணம் 5)***

என்ற சிவபுராண அடியும் இக்கருத்தை மேலும் உறுதிப்படுத்துகின்றன.

**பதி இலக்கணம்**

பதியின் இலக்கணத்தை சைவசித்தாந்தம் இருவகையாகப் பகுத்துக் கூறுகின்றது.

1. சொரூப இலக்கணம் (பதியின் சிறப்பியல்பு)
2. தடத்த இலக்கணம் (பதியின் பொதுஇயல்பு)

***1. சொரூப இலக்கணம்***

எவ்வித கலப்புமின்றி தன் உண்மையான நிலையில் பதி விளங்குவது பதியின் சொரூப இலக்கணமாகும். இந்நிலையில் பதியைச் சுத்த சிவம் என்றும், பரமசிவம் என்றும் சைவசித்தாந்தம் கூறும். சொரூப நிலையில் பதியானவர் அருவம், உருவம், அருவுரும் என்ற முத்திருமேனிகளையும் கடந்தவர் பஞ்சகிருத்தியங்கள் எல்லாவற்றையும் செய்பவர் அல்லர். இச்சொரூப இலக்கணம் பற்றி சிவஞான சித்தியார் விளக்கமாகத் தருகின்றது.

***"சிவன் உருவுமல்லன் சித்தினொடு அசித்து மல்லன் பவமுதல் தொழில்களொன்றும் பண்ணிடுவானு மல்லன் தவ முதல் யோக போகம் தரிப்பவன் அல்லன் தானே இவைபெற இணைந்தும் ஒன்றும் இயைந்திடா இயல்பினானே" (சிவஞானசித்தியார் சுப. 90)***

சிவப்பிரகாசச் செய்யுளில் கூட பதியின் **சொரூப இலக்கணம்** ஆழமாக தரப் பட்டிருக்கிறது.

***"பல்கலை ஆகமவேதம் யாவையினும் கருத்து அப்பதி பசு பாசம் தெரித்தல் பரமேயதுதான் நிலவும் அரு உரு அன்றி குணம் குறிகளின்றி நின்மலமாய் ஏகமாய் நித்தமாகி அலகில் உயிர்க்கு உணர்வாகி அசலமாகி அகண்டிதமாய் ஆனந்த உருவாயன்றிச் செலவரிதாய்ச் செல்கதியாய்ச் சிறிதாகிப் பெரிதாகித் திகழ்வது தற்சிவமென்பர் தெளிந்துளோரே" (சிவப்பிரகாசம் 13)***

சொரூப நிலையில் பதி குணம் குறிகளற்றதாக, மல சம்பந்தமற்றதாக, அகண்டிதமாக, ஆனந்தமாக இருக்கும் குணாதீதப் பொருளாகும்.

***"விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்" (சிவபுராணம் 24-25)***

என்று கூறும் சிவபுராண அடிகள் இதற்கு வலுவூட்டுகின்றன. கந்தபுராண செய்யுளிலும் இக்கருத்துக்கள் அழுத்தித் தரப்பட்டிருப்பதை

கண்டுகொள்ளலாம். அது பதியை பின்வருமாறு வர்ணிக்கின்றது.

**"ஊரிலான் குணங்குறிகளிலான் உரைக்கும் பேரிலான் ஒரு முன்னிலான் பின்னிலான் பிறிதோர் சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு நேரிலான் உயர்க்கடவுளாய் என்னுள் நின்றான்" *(கந்தபுராணம்)***

திருவருட்பயன் குறள் வெண்பாவிலும் இப்பொருள் பொதிந்திருப்பதைக் காணலாம்.

**"பெருமைக்கும் நுண்மைக்கும் பேரருட்கும் பேற்றின் அருமைக்கும் ஒப்பின்மை யான்"**
**(திருவருட்பயன் 3)**

**2. தடத்த இலக்கணம்**

பதி, உயிர்கள் மேல் கொண்ட அளப்பருங் கருணை காரணமாக, அவ்வுயிர்களின் உய்தி கருதி படியிறங்கி உருவ அருவ அருவுருவ முத்திருமேனிகளில் நவந்தரு பேதங்கள் தாங்கி பஞ்சகிருத்தியங்களைச் செய்யும் நிலை தடத்த இலக்கணம் ஆகும். இச்சாசத்தி, கிரியா சத்தி, ஞான சத்தி ஆகிய முச்சத்திகளை பொருந்தி நிஷ்களதிருமேனியாகிய அருவத்திருமேனியைப் பெறும் சிவம் சிவன் என்றும், சத்தர் என்றும், இலய சிவன் என்றும், நிஷ்கள சிவன் என்றும் பெயர் பெறுகின்றது. இந்தலயத் தானம் **"சிவதத்துவம்"** ஆகும். ஞானசத்தியும், கிரியாசத்தியும் சமமாகப் பொருந்தும் நிஷ்களசகளத்திருமேனியாகிய அருவுருவத் திருமேனியைப் பெறும்போது சிவம் சதாசிவன் என்றும் உத்தியுத்தர் போகசிவன் என்றும் நிஷ்களசகளசிவன் என்றும் பெயர்பெறுகின்றது. இப்போகத்தானம் **"சாதாக்கிய தத்துவம்"** ஆகும். ஞானசத்தி குறைந்தும் கிரியாசத்தி மிகுந்தும் இருக்கும் அவதாரம் சகளத்திருமேனியாகிய உருவத் திருமேனியாகும். இந்த நிலையில் சிவம், மகேஸ்வரன் என்றும் பிரவிருத்தர் என்றும் அதிகாரசிவம் என்றும் பெயர் பெறுகிறது. இவ்வதிகாரத்தானம் **"ஈசுரதத்துவம்"** ஆகும். சிவன், மகேஸ்வரன், சதாசிவன் ஆகிய மூன்றுக்கும் தம்முள் பேதமில்லை. சத்திகளின் வேறுபாட்டாலே இப்பேதம் என்பது உபசார வடிவங்களாகும். எனவே இம் மூன்று வடிவங்களாகும் பதியினது **"தடத்த இலக்கணம்"** என்பது பெறப்படும். தடத்த இலக்கணம் பற்றி திருவருட்பயன்,

**"அருவும் உருவும் அறிஞர்க்கு அறிவாம் உருவும் உடையான் உளன்"**
**(திருவருட்பயன் 5)**

என்று கூறுகின்றது. மேலும் சிவஞான சித்தியாரின் பின்வரும் செய்யுளும் அது பற்றிய விளக்கத்தைத் தந்திருக்கின்றது.

**"அருவமோ உருவாரூபமானதோ அன்றி நின்ற உருவமோ உரைக்கும் கர்த்தா வடிவெனக் குணர்த்திங்கென்னின் அருவமும் உருவம் அரூபம் ஆனதும் அன்றி நின்ற உருவமும் மூன்றும் சொன்ன ஒருவனுக்குள்ளவாமே"**
**(சிவஞான சித்தியார் சுப. 58)**

சிவப்பிரகாசமும் மேலே விளக்கப்பட்ட தடத்த இலக்கணத்தை அருமையாகப் பாடலில் காட்சிப்படுத்துகின்றது.

**"நீடு பராசத்தி நிகழ் இச்சாஞான நிறைகிரியை தரவரனை நிமலன் மேவி மாடரிய கருணைதிருவுருவமாகிநவின்று பலகலை நாத விந்துவாகி கூடும் ஒளிவளர் குடிலை மாயைமேவிக் கொடுவினைகொள் தனுகரணபுவன போகம் பீடுபெறநிறுவி அவை ஒடுக்கு மேனிப் பிறங்கிய நிட்களசகளப் பெற்றியாமே" *(சிவப்பிரகாசம் 14)***

பராசத்தி என்னும் தன் அருட்சத்தியாலே உணரமுடியாத திருவுருவத்தைக் கொள்பவர் சிவனே அவரே நாதம் விந்து முதலிய தத்துவங்கள் சேர்ந்து ஒளிரும் சுத்தமாயை (குடிலை)யில் சென்று பல கலைகளையும் உருவாக்குபவர். உயிர்களுக்காக மாயாகாரியங்கள்

எனப்படும் மாயேயங்களான தனு, கரண, புவன, போகங்களைத் தந்து பின் அவற்றை மாயையில் ஒடுக்கித் தானே அருவம் உருவம் அருவுருவம் ஆகிய வடிவங்களைக் கொள்பவரும் சிவனே என்று தடத்தநிலை பேசப்பட்டுள்ளது.

இத்தடத்த நிலையில் பஞ்சகிருத்திய கர்த்தாவாகிய பதிக்கு மேலான குணங்களும் இருப்பதாக கொள்ளப்படுகின்றன.

**"கோளில் பொறியில் குணமிலவே எண்**
**குணத்தான் தாளை வணங்காத் தலை"**
**(திருக்குறள் 8)**

என்ற திருக்குறளில் இறைவன் எண்குணத்தான் என்ற சிறப்பு கூறப்பட்டுள்ளது. மேலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள்,

**"மறையவனை எண்குணத்தானை"**
**(சுந்தரர் தேவாரம் 406)**

என்று போற்றிப் பாடியிருப்பதும் நோக்கத்தக்கது.

## முத்திநிலையில் பதி

உயிரானது பாசஞானமும் பசு ஞானமும் நீங்க, இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதம் கைவரப்பெறுகிறது. பக்குவமடைந்த அந்நிலையில் ஞானகுரு மூலம் சிவதீட்சையும் உபதேசமும் பெற்றுக் கொள்ளும்போது சிவோகம் பாவனையில் பதி ஞானத்தை அடைந்து முத்திநிலைக்குத் தகுதி பெறுகின்றது. முத்தி நிலையில் பதியும் உயிரும் அத்து விதமாக "தாடலை" போல் கூடிய பிரிவற்ற திருவடிசேர் முத்தியைப் பதி உயிர்களுக்கு அளிப்பன் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. இந்த முத்திநெறியில் பதி, "பேதமற நின்று இவனைத் தானாக்கி வைக்கும் பெருகு சிவபோகமெனப் பேசும் நெறி" என்று உண்மை நெறி விளக்கம் (6) கூற, "அந்நியம் இன்மையில் அரன்கழல் செலும்" நெறியெனச் சிவஞானபோதமும் (சூத். 8), "துயருறும் தொல்லுயிரை மன்னும் அருட்குருவாய் வந்து அவரின் நீக்கி மலமகற்றி தானாக்கி மலரடிக்கீழ் வைக்கும்" நெறி என சிவஞானசித்தியாரும் (சூத். 8) சிறப்பித்துக் கூறும் உன்னத நெறியாகும். பதி, பரிபாகம் அடைந்த உயிரை தனது அருட்சத்தி மூலம் அநந்நியமாகத் தன்னோடு சேர்த்து பேரின்பத்தை அளிக்கின்ற இந்நெறி முத்திநெறி. இதுவே பரமுத்தி திருவடிசேர் முத்தி. சைவசித்தாந்தம் கூறும் பிறப்பறுக்கும் பிஞ்ஞகனோடு இரண்டறக்கலக்கின்ற சிவானந்த முத்தி.

## நிறைவுரை

சைவசித்தாந்தம் கூறும் பதி, அநாதிமுத்தசித்துரு சற்காரியவாத அடிப்படையில் சங்காரகாரணனே முதல்வன் என்ற நிலையில் சர்வஞ்ஞனாக, சர்வகர்த்திருத்துவனாக, பஞ்சகிருத்தியகர்த்தாவாக விளங்குவது. இப் பதி சொருபலக்கணம், தடத்தலக்கணம் உடையது. சத்தியோடு கூடி தாதான்மிய நிலையில் உயிர்கள் உய்திபெறப் பஞ்ச கிருத்தியங்களைச் செய்வது. உயிர்களின் மலத்தினை வலியடக்கி காணும் உபகாரத்தையும் காட்டும் உபகாரத்தையும் செய்து உயிர்களை அத்துவிதமாக தன்னோடு கலக்கச்செய்து பேரின்ப வீட்டை அளிப்பது. முத்திநிலையில் உயிரைத் தன்னோடு பிரிவற சேர்த்துத் தானாக்கிவிடும் பெருங்கருணை கொண்டது. இத்தகைய மேலான் தன்மையைச் சைவ சித்தாந்தம் தெளித்துச் சிறப்பிக்கின்றது.

## உசாத்துணை நூல்கள்


1. அறிவொளி. அ. *மெய்கண்டசாத்திரம்*, சென்னை, வர்த்தமானன் பதிப்பக வெளியீடு.
2. இராமநாதபிள்ளை. ப. *திருமந்திரம் மூவாயிரம் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த (விளக்கவுரை)*, சென்னை, நூற்பதிப்புக் கழக வெளியீடு.
3. ஐயர், VVS. 1984 திருக்குறள், ஸ்ரீ இராமகிருஷ்ண தபோவனம், திருச்சி ராப்பள்ளி.
4. சுந்தரமூர்த்தி தம்பிரான். 2013. *திருத்தொண்டர் புராணம்*, திருப்பனந்தாள், காசிமட வெளியீடு.

5. சுப்பிரமணியம், ச. 2014. கந்தபுராணம் - யுத்தகாண்டம் சூரபத்மன் வதைப்படலம். கொழும்பு, அஷ்டலஷ்மி பதிப்பகம்.
6. ஞானசம்பந்தன், அ.ச. 1998. தேவாரத் திருப்பதிகங்கள், சென்னை கங்கை வெளியீடு.
7. தண்டபாணிதேசிகர், ச. 2014. *திருமூலர் திருமந்திரம்,* திருவாவடுதுறை ஆதீனம். (உரையாசிரியர்).
8. திருவிளங்கம், மு. 2010. *சிவஞான சித்தியார்.* சுபக்கம் யாழ்ப்பாணம், (புத்துரை) சிவதொண்டன் சபை.
9. திருவிளங்கம், மு. 1974. *சிவப்பிரகாசம், யாழ்ப்பாணம் கூட்டுறவு தமிழ்நூற் பதிப்பு,* யாழ்ப்பாணம், (புத்துரை) விற்பனைக்கழகம்.
10. பட்டுச்சாமி ஓதுவார், தி. 1962. *கந்தபுராணம் உரைநடை.* திருப்பனந்தாள், காசிமட வெளியீடு.
11. புலியூர் கேசிகன். 2003. திருக்குறள் புதிய உரை, சென்னை, பூம்புகார் பதிப்பகம்.
12. வரதராஜன், பு. 2014. *திருமந்திரம்.* சென்னை, பழனியப்பா பிரதர்ஸ்.
13. வீரவாகுப்பிள்ளை, எம். இ. 1957. *திருவாசகம்.* தியாகராய நகர், ஒற்றுமை நிலையம்.
14. வைத்தியநாதன், கு. 2014. *சிவஞான போதம்.* திருவாவடுதுறை, திருவாவடுதுறை ஆதீன சைவசித்தாந்த பயிற்சி மையம் (தெளிவுரை).